# ஒரு நவீன நீதிக்கதை

அது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி புரியும் பிரம்மாண்டமான தொழிற்சாலை. நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் அது, அறிவியலின் முன்னேற்றத்திற்கோர் எடுத்துக் காட்டு இத்தொழிற்சாலையின் விபத்து விகிதம் அதிகமாக இருந்தது. மனிதனின் இயல்பான மறதி, கவனக்குறைவு



அல்லது அறியாமைக்கு அங்கு இடமில்லை; மீறினால் இயந்திரங்களில் சிக்கிக் கொண்டு கை, கால் விரல்களை இழக்க நேரிடலாம். ஒரு சில நேரங்களில் மின்சாரத்



தாக்குதலால் இயந்திரங்களில் சிக்கியோ, சிலர் உயிரும் இழந்ததுண்டு. விழிப்புணர்வுள்ள சில பெரிய மனிதர்கள், இந்நிலையை மாற்ற வேண்டும் என்று உணர்ந்தார்கள்.

முதன் முதலாக அப்பகுதியில் உள்ள சர்ச் மூலம் தொழிற்சாலையின் வாயிலில் முதலுதவி அளிக்கும் கூடாரம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. விரைவிலேயே அது ஒரு சிறிய கிளினிக்காக வளர்ந்தது. பல தொழிலாளர்கள் இதனால் பயனடைந்தார்கள். இதனைக்கண்ட அந்நகர 'லயன்ஸ் கிளப்' இக்கிளினிக் ஒரு சிறிய மருத்துவ மனையாக மாற நிதி உதவியளித்தது. இதில் அறுவை சிகிச்சை வரை செய்யக்கூடிய வசதிகள் இருந்தன. எல்லோரும் மருத்துவமனைக்காக உதவ முன் வருவதைக் கண்ட தொழிற்சாலை



நிர்வாகம், தாங்களும் பரோஉபகாரத்தில் பின் தங்கிவிடவில்லை என்று பறைசாற்றும் வகையில் ஆம்புலன்ஸ் ஒன்றை

நன்கொடையளித்தது. விபத்துக்கு உள்ளானவர்களை அதிவேகமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிந்ததால் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. எனினும், உற்பத்தி பெருகப் பெருக விபத்துகளின் எண்ணிக்கையும் வளர்த்தான் செய்தது. நவீன மருத்துவ கவனிப்பு இருந்தும் இறப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறையவில்லை.

அப்போது தான் ஒரு சிலர் சிந்திக்கத் துவங்கினார்கள். விபத்திற்குக் காரணமான கருவிகளைக் குறித்து ஒன்றுமே செய்யாமல், பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிப்பது சரிதானா? என்று...

**கிராம பெண்கள் சமூக கல்வி மையம்**

நேரு நகர், வல்லம் அஞ்சல்,

திருப்போரூர் கூட்டு ரோடு,

காஞ்சிபுரம் (மாவட்டம்) 603 002.

தொலைபேசி: 04114 - 30682